கில்லாடிக்குக் கில்லாடி

ராணி காமிக்ஸ்

ராணி காமிக்ஸ் 111
(மாதம் இருமுறை இதழ்)

பிப்ரவரி 1–15
1989

முகமூடி வீரன் பில்லி தோன்றும்

கில்லாடிக்குக் கில்லாடி

அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள கன்சைட் என்ற நகரத்தில் திடீரென்று கொள்ளையர்கள் புகுந்தார்கள்.
மங்கி, இங்கே இறங்கிக் கொள்ளலாமா?
முதலில், யாரும் பார்க்குமுன் நாம் பிரிந்து போக வேண்டும்.
அவர்களும் வந்து விடட்டும்

சிறிது நேரத்தில் இன்னும் இரண்டு கொள்ளையர்கள் வந்து ஒரு கடை முன் இறங்கினார்கள்.
உங்களுக்கு என்ன வேண்டும்!
சில சாமான்கள் வாங்க வேண்டி-யிருக்கிறது

குழந்தைகள் பள்ளிக்கு வந்துகொண்டு இருந்தார்கள். ஒரு கட்டிடத்தின் பின்னே கொள்ளையர்கள் பதுங்கியிருந்தார்கள்.
இல் குழந்தைகள் உள்ளே சென்றதும் உன் கைவரிசையைக் காட்டு!
SCHOOL
ஓ.கே. காரல்! காரியத்தை கச்சிதமாக முடித்து விடுகிறேன்.

இரு கொள்ளையர் பள்ளியை நோக்கிப் போனார்கள். அதே நேரம் கட்டிடத்தின் உச்சியில் ஒருவன் கையில் துப்பாக்கியுடன் நிற்பதை காரல் பார்த்தான்.
ஊருக்குள் யாருமே வர முடியாது!

வகுப்பு நடந்துகொண்டு இருந்தது. கில், உள்ளே நுழைந்தான்.
யார் நீங்கள்? யாரைப் பார்க்க வேண்டும்?
பயப்படாதீர்கள் மிஸ்! எங்களால், உங்களுக்கும் குழந்தை–களுக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாது!

அதேநேரம்— காரல், செரீப் அலுவலகத்துக்குள் துப்பாக்கி-யுடன் நுழைந்தான்.
யார் நீ?
போகப் போக நீயே புரிந்து கொள்வாய்! மரியாதை—யாக தாத்தா இருக்கும் அந்த அறைக்குள் போ!

செரீப்பை அவரது அலுவலகத்தி-லேயே சிறைவைத்தான், காரல்.
நீ மாரிஸ் கூட்டத்தை சேர்ந்தவன் —தானே? மாரிசை கைது செய்திருக்கிறார்கள். அவனை இன்று இங்கே கொண்டு வருகிறார்கள்.
அவரை விடுவிக்கத் தான் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்!

காரலுடன் இன்னொரு கொள்ளைக்காரனும் சேர்ந்துகொண்டான். செரீப்பை விட்டுக் காவலில் வைத்துவிட்டு, அவர் கொண்டுவந்த உணவை ரசித்து சாப்பிட்டான், காரல்.
மாரிசை உன்னால் விடுவிக்க முடியாது! அதற்கு நீ முயற்சித்தால், முதலில் மாரிஸ் சுட்டுக் கொல்லப்—படுவான்.
அப்படியா! அதையும் பார்ப்—போம்! காவலர் எங்கள் தலைவரை கொண்டுவரும் நேரம் நாங்கள் திடீர் என்று தாக்குதல் நடத்துவோம்.

ஊரை கொள்ளையர்கள் மடக்கிவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீ போல பரவியது. ஊர் மக்கள் செரிப்பிடம் முறையிட வந்தார்கள். அங்கே- கொள்ளையர்களைக் கண்டதும் கூச்சல் போட்டார்கள்.
நீங்கள் கூச்சல் போட்டு ஒன்றும் ஆகப் போவது இல்லை.
ஏனென்றால், ஊரே இப்பொழுது எங்கள் பிடியில்!
எங்கள் குழந்தைகளை எங்கே அடைத்து வைத்திருக்கிறாய்?

ஊர் மக்கள் என்ன செய்வதென்று புரியாமல் தத்தளித்தார்கள். குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் அடைத்து வைக்கப்-பட்டார்கள். ஒரு கடையில்...
கொள்ளைக்-காரர்கள் எதற்காக இங்கே வந்திருக்-கிறார்கள்?
அங்கே என்ன வீண் பேச்சு? கடைக்கு வந்தால் வேண்டியதை வாங்கிவிட்டு பேசாமல் வெளியே போ!

ஊர் எல்லையில் கொள்ளையர்கள் கட்டிடங்கள் மீது துப்பாக்கியுடன் நிற்கிறார்கள். அப்போது ஜான்சன் கடைக்கு வந்தார். அவர் மலையில் வசிப்பவர்.
கயிறு இருக்கிறதா?
க...க... கயிறா... இ...இ... இருக்கு! உள்ளே வாங்க!
ஏய் கிழவா! அவனிடம் ஏதாவது உளறினால் உன்னை தீர்த்துக்கட்டி விடுவேன்.
கடைக்காரரை கொள்ளையன் துப்பாக்கி முனையில் வைத்து இருந்தான்.

ஜான்சன் கடைக்குள் வந்தார். கடைக்காரரின் முகம் பதட்டமாக இருப்பதை கண்டார்.
என்ன, சைரஸ், உடம்பு சரி யில்லையா?
ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்!
அதெல்லாம் ஒன்றுமில்லை, ஜான்சன். நான் நன்றாகத்தானே இருக்கிறேன்.
ஏய்...மிஸ்டர் உனக்கு. வேண்டியதை வாங்கி விட்டுக் கிளம்பு. அநாவசி - யமாதப் பேச்சு என்ன வேண்டிக்கிடக்கு?

காள்ளைக்காரனின்
பச்சு ஜான்சனுக்குக்—
காபமூட்டியது.
டனே தன் கை
ரிசையை காட்டினார்.
ஆ...
அதைப்பற்றி உனக்கென்ன பேசாமல் உன் வேலையைப் பார்த்து விட்டுப் போ.
ஆ... ஜான்சன்.
டீரென்று பின்னால் இருந்து ஒரு கொள்ளைக்காரன் ஜான்சன்
லையில் துப்பாக்கியால் அடித்தான்.

லையைப் பிடித்துக்கொண்டு அப்படியே
ழே அமர்ந்தார், ஜான்சன்.
ஏய்... மிஸ்டர், எழுந்திரு. மரியாதையா வெளியே போ.
பேசாமல் இளம்புங்கள். ஏன் வம்பை விலைக்கு வாங்க வேண்டும்?
யார் இவர்கள்?

கயிறு வாங்கிக்கொண்டு ஜான்சன் கிளம்பினார். வழியில் மதுக்-கடையில் வண்டியை நிறுத்தினார்.ஜான்சன் இங்கே வந்தால் ரோசியிடம் பேசிவிட்டுச் செல்வது வழக்கம்.
அய்யய்யோ... ஜான்சன் வருகிறார். ரோசியை எங்கே என்று கேட்பாரே
போ. அவனை உள்ளே விடாதே!
ரோசி இல்லை, வெளியே போயிருக்கிறாள் என்று சொல்.
மதுக்கடைக்காரர் வெளியே வந்தார். அதற்குள் ஜான்சன் வண்டியில் இருந்து இறங்க முயன்றார்.
கொஞ்சம் பொறுங்கள்! ரோசி இல்லை, உறவினர் வீட்டுக்குப் போயிருக்கிறாள்
எனக்கு உறவுக்காரர் யாரும் இல்லை என்று ரோசி சொன்னாளே. இவர் என்னை ஏமாற்றுகிறார். இங்கும் ஏதோ நடந்திருக்கிறது.


ஊர் எல்லையில் வண்டியை நிறுத்தினார் ஜான்சன். கீழே இறங்கி, குதிரையின் காலைப் பார்ப்பது போல சுற்றுமுற்றும் நோட்டமிட்டார்.
கட்டிடத்தின் மேலே இருவர் துப்பாக்கியுடன் நிற்கிறார் -களே! என்ன விஷயம்?
ஏய், அவன் நம்மை நோட்டம் விடுகிறான், பார்த்தாயா?
ஆமாம்.

ஜான்சன் திடீர் என்று வண்டியில் ஏறிக்கொண்டு குதிரையை விரட்டினார்.
ஊருக்குள் கொள்ளைக்காரர்கள் புகுந்துவிட்டார்கள் என்று நினைக் -கிறேன்
அவர்களிடமிருந்து ஊர் மக்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.
குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடியது!

ஒரு குன்றின் மீது ஒரு கறுப்புக் குதிரை தனியே நின்றுகொண்டு இருந்தது.
செல்லக் குட்டியே! உனக்கு ஒரு வேலை காத்திருக்கிறது!

ஜான்சன் முகமூடி அணிந்து கொண்டு பில்லியாக மாறி, கறுப்புக் குதிரையில் ஏறிப் பறந்தார்
செல்லக் குட்டியே! பற...பற...!

கட்டிடத்தின் பின்னே வந்து பில்லி பதுங்கினார்!
டீன், ஏதாவது தெரிகிறதா?
இல்லை! தலைவர் வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் போலி-ருக்கிறது.
அதற்குள் நான் சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறேன்!
பில்லி பதுங்கிப் பதுங்கி கட்டிடத்துள் நுழைந்தார்.
பில்லி! நீங்களா?
சத்தம் போடாதீர்கள்! இங்கே என்ன நடந்தது?
பள்ளிக் குழந்தைகள், செரீப் எல்லாரும் சிறை வைக்கப்பட்டதை டேவிட் தெரிவித்தார்.
கொள்ளைக் கூட்டத் தலைவன் மாரிசை இன்று இரவு இங்கே கொண்டு வருகிறார்கள்.
அப்படியா! அங்கே போவது யார்?

சலூன்
அவசரப் படக்கூடாது! பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்!

பில்லி இருளில் மறைந்து, மெதுவாக சலூன் கடைக்குள் புகுந்தார்.
ஐந்து ரூபாய் கொடுங்கள்.
சலூன்.
தருகிறேன்! தருகிறேன்!!

அவன் கொள்ளைக் கூட்டத்தை சேர்ந்தவன் என்பதை பில்லி கண்டுகொண்டார்!
ஐந்து ரூபாய் தானே இந்தா வாங்கிக்கொள்.

கொள்ளைக்காரன் போனதும் பில்லி உள்ளே புகுந்தார்.
பயப்படாதே! நான் பில்லி உனக்கு வேலை இருக்கிறது.

அவனை கட்டிடத்தின் பின் புறம் கூட்டிச் சென்றார், பில்லி.
மன், சந்தேகப் படும்படியாக யாரும் வருகிறார்களா என்று பார்த்துக்கொள். அதேநேரம் நம் தலைவரைக் கொண்டு வருகிறார்களா என்பதையும் பார்த்துக்கொள். மறந்துவிடாதே!
நான் பார்த்துக் கொள்கிறேன். நீ சீக்கிரம் வா!
பில்லி உடனே செயல்பட்டார்.

சலூன்காரனைக் கூப்பிடச் சொல்லிவிட்டு, பில்லி கையில் கயிற்றுடன் தயாராக நின்றார்.
டீன்... ஏய்... டீன்...
கொள்ளைக்காரன் டீன் வெளியே எட்டிப் பார்த்தான். அதேநேரம்- பில்லி அவன் கழுத்தில் கயிற்றை வீசிக் கீழே இழுத்துப் போட்டார்.
ஆ.... அம்மா!...
அவன் கை கால்களைக் கட்டி கட்டிடத்தின் உள்ளே போட்டார்கள்.

பில்லி, டேவிட், சலூன் காரரர் மூவரும் திட்டம் போட்டார்கள்.
நீ கட்டிடத்தின் மேலே அவனுக்குப் பதிலாக நில்!
சரி, நான் கூரையில் ஏறிக் கொள்கிறேன். நீங்கள் பள்ளிக்கூடத்-திற்கு செல்-லுங்கள்.
பில்லி. கொள்ளையர்கள் ஒரு பீப்பாய் நிறைய வெடிகுண்டுகளை வைத்திருக்-கிறார்கள், ஜாக்கிரதை.

சலூன்காரர் மெதுவாக சென்று கட்டிடத்தின் உச்சியில் ஏறிக் கொண்டான்.
நீங்கள் போய் ஓய்வு எடுங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன்.
கொள்ளையர்-களிடம் சிக்கியிருக் கும் குழந்தைகளைக் காப்பாற்ற உங்களால்தான் முடியும் பில்லி. எச்சரிக்கையாக செயல்படுங்கள்!

பள்ளிக்கு வெளியே நின்று பில்லி சிக்னல் கொடுத்தார். பள்ளிக்குள் காவலில் இருந்த ரோசி அதை கவனித்து சன்னல் அருகே சென்றாள்.
ஏய்... சன்னல் பக்கம் போகாதே! இங்கே வா.
உள்ளே ஒரே புழுக்கம். அதுதான் சன்னல் பக்கம் வந்தேன்.

சன்னல் அருகே வந்து வெளியே எட்டிப் பார்த்தாள். வெளியே பில்லி நின்றுகொண்டு இருந்தார்.
பில்லி! நீங்களா?
உஷ்... சத்தம் போடாதே! நான் சொல்வதை கவனமாகக் கேள்.
என்ன செய்ய வேண்டும் என்பதை பில்லி விளக்கினார்.

உள்ளே வந்தாள் ரோசி.
ஏய்... என்ன இது? உன் விருப்பம் போல் அலைகிறாய். பேசாமல் இந்த இடத்தில் உட்கார்.
நான் ஒன்றும் உன் அடிமையில்லை, நீ சொல்வதைக் கேட்க. எல்லாம் எனக்குத் தெரியும்.

அதைக் கேட்டதும் கொள்ளையன் இல் கொதித்தான்.
இப்போது நீ என் அடிமைதான்!
அவளை விடு...விடு!
மரியாதையாகக் கையை எடு!
அனைவரும் கூச்சல் போட்டனர்.


அதேநேரம் ஆசிரியை வகுப்பறையின் கதவை திறந்து பில்லியை உள்ளே விட்டாள்.
பதுங்கிக் கொள்ளுங் கள்!

பில்லி அங்கிருந்த பியானோவுக்குப் பின்னால் மறைந்து கொண்டார். பில்லி வந்துவிட்ட மகிழ்சசியில் ஆசிரியை பியானோ வாசிக்கத் தொடங்கினாள்.
ஏய்... நிறுத்து! யார் உன்னை வாசிக்கச் சொன்னது?
ஆத்திரத்தில் காட்டுக் கத்தல் கத்தினான் கொள்ளைக்காரன் கில்.

இல், கத்திக்கொண்டே பியானோ அருகே வந்தான்.
அப்போது மறைந்திருந்த பில்லி பாய்ந்து அவனை தாக்கினார்.
கும்!
ஆ....!
ரோசி! அவனது துப்பாக்கியை எடுத்துக் கொள்!

எதிர்பாராத தாக்குதலை சமாளிக்க முடியாமல் இல் விழ்ந்தான். அவனது கை கால்களைக் கட்டி ஒரு மூலையில் போட்டார். பில்லி.
ரோசி! குழந்தைகளை அழைத்துக்கொண்டு, பின்னால் உள்ள மரத்துக்குப் போ.
சரி, பில்லி!

பில்லி புயல் வேகத்தில் செயல்பட்டார்.
சீக்கிரம் போங்கள். அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்.
நீங்கள் கவலைப் படாமல் புறப் -படுங்கள். பில்லி
பில்லி வெளியே வந்தார். அப்போது இன்னொரு கொள்ளைக்காரன் வந்தான்.
ஏய்... நீ யார்?
பில்லி அவனுக்குக் கொடுக்க வேண்டியதையெல்லாம் கொடுத்து, அவனையும் வகுப்பறைக்குள் இழுத்து வந்தார்.
உனக்குத் துணைக்கு உன் ஆளையே கொண்டு வந்திருக்கிறேன், பார்!


பில்லி வெளியில் வந்தார். அப்பொழுது ஒரு கொள்ளைக்காரன் கட்டிடத்தின் மேல்கூரையில் இருந்தவனுக்கு சிக்னல் கொடுத்தான்.
இவன் சிக்னல் கொடுக்கிறானே! சலூன் - காரர் நான் என்று நினைத்துக் கொள்வாரே?

அவன் சிக்னல் கொடுத்துவிட்டு மதுக்கடைக்குள் நுழைந்தான். பில்லி அவனை பின்தொடர்ந்தார். உள்ளே, காரல் அவன் ஆட்களுடன் மது அருந்திக் கொண்டு இருந்தான்.
ஏதாவது தகவல் உண்டா?
ஒன்றும் இல்லை.
அவர்கள் மது பரிமாறிக்கொண்டிருந்த கடைக்காரனின் காலை வாரிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள்!

மாரிசை கொண்டுவரும் நேரம் நெருங்கிவிட்டதால், காரல் அவனுடைய ஆட்களுக்குக் கட்டளையிட்டான்.
இரண்டு பேர் தெற்குப் பக்கம் போங்கள். ஏதாவது வண்டிகள் தெரிந்தால் உடனே தகவல் கொடுங்கள்.
ஓ.கே. காரல்!

காரலின் கட்டளைப்படி இருவர் குதிரையில் கிளம்பினார்கள். வெளியில் நின்ற பில்லியும் அவர்களைப் பின்தொடர்ந்தார். இருவரும் கட்டிடத்துக்கு வந்ததும் கூரையில் உள்ள டீனை அழைத்தார்கள்.
ஏய்... டீன்! நாங்கள் இருவரும் ஊருக்கு வெளியே போகிறோம். வேறு யாரோ என்று நினைத்து எங்களை சுட்டுவிடாதே!
இரு! நான் உள்ளேபோய் அவனிடம் சொல்லிவிட்டு வருகிறேன்.
குதிரையில் இருந்து இறங்கி உள்ளே நுழைந்தான்

கட்டிடத்தின் உள்ளே டேவிட் கையில் தடியுடன் தயாராக நின்றுகொண்டு இருந்தார். கொள்ளையன் உள்ளே நுழைந்ததும்—
ஏய்...
இந்தா பிடி!
தலையில் ஓங்கி அடித்தார்.
அதே நேரம்— வெளியில் பதுங்கியிருந்த பில்லி குதிரையில் நின்றவனை கீழே இழுத்துப் போட்டுப் பந்தாடினார்.
டேவிட்! சீக்கிரம் இவனையும் உள்ளே இழுத்துப் போடுங்கள்.
ஆ... செத்தேன்.

ஏய், விரைவாக எழுந்து கட்டிடத்தின் உள்ளே போ...
யார் நீ? காரலுக்கு தெரிந்தால் உன்னை தொலைத்து விடுவான்.
அப்போது, சலூன்காரர் அவசர அவசரமாக ஓடிவந்தார்.
பில்லி! தெற்கு பக்கம் ஒரு வண்டி வருகிறது.
நல்லது! நீ உடனே குதிரையை எடுத்துக்கொண்டு அவர்களிடம் சென்று விவரம் சொல்லி நிறுத்தி வை.
சிக்னல் தருகிறேன். பிறகு அழைத்து வா!
மதுக்கடையில் காரலும் மங்கியும் சீட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள்.
இந்நேரம் நம் தலைவரை கொண்டு வந்திருக்க வேண்டும். ஒருவேளை வழியில் ஏதாவது நடந்திருக்குமோ? எதற்கும் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா


அப்போது பில்லி உள்ளே நுழைந்தார்.
எதற்கு உங்களுக்கு அந்தக் கஷ்டம்.
யார் நீ?
ஆ... பில்லி!
கொள்ளையர்கள் பில்லியைக் கண்டதும் திகைத்துப் போனார்கள்.


கொள்ளையர்கள் துப்பாக்கியை எடுத்து பில்லியைத் தாக்க முயன்றார்கள். அதற்குள் பில்லி முந்திக்கொண்டார்.
டுமீல்...
டுமீல்..
சபாஷ்... பில்லி! இவர்களுக்கு சரியான பாடம் கற்பித்துவிட்டாய்!!


கொள்ளைக்காரர்கள் குழம்பிப் போனார்கள்.
ஏ...மிஸ்டர்! ரொம்ப சந்தோசப்பட்டுக் கொள்ளாதே!
நாங்கள் நினைத்தால் இந்த ஊரையே இப்போதே தரைமட்டமாக்கி விடுவோம்.
அது உன்னால் முடியாது! எபனேசர் அவர்களிடம் இருந்து துப்பாக்கியை எடுங்கள்

பிள்ளைகளை மரத்தடியில் படுக்க வைத்தார்கள். அப்போது—
ரோசி! என் மகனைக் காணவில்லை. எனக்கு பயமாக இருக்கிறது. ஒருவேளை கொள்ளையர்களிடம் சிக்கியிருப்பானோ!
நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் போய்ப் பார்த்து வருகிறேன்.


மதுக்கடையில் கொள்ளையர்களிடம் இருந்து துப்பாக்கிகளை எபனேசர் பறித்துக்கொண்டு இருந்தார்.
எபனேசர். விரைவாக எடுங்கள்!
இதோ எடுத்துவிட்டேன், பில்லி!

அப்போது, எதிர் பாராதவிதமாக எபனேசர் கால் இடறி கீழே விழுந்தார்.
உடனே கொள்ளையர்கள் சுதாரித்துக் கொண்டார்கள். இதுதான் சமயம் என்று ஒருவன் விளக்கை நோக்கி சுட்டான்.

க்கு உடைந்ததும் இருட்டில்
ள்ளையர்கள் எபனேசரை
னார்கள். அப்போது ஒருவன்
லியை நோக்கிச் சுட்டான்.
பில்லி! என்னைக் காப்பாற்று!
அடி! கொல்லு
டுமீல்...!
பில்லி அவர்களை நோக்கிப் பாய்ந்தார்!
காரல் வெளியே தப்பி ஓடினான்.
பில்லி, அங்கே பாருங்கள். ஒருவன் ஓடுகிறான்!
ஓடட்டும்! எங்கே போய்விடப் போகிறான்?
ஆ!
பில்லி இரு கொள்ளையரை அடித்துப்போட்டார். அதற்குள் எபனேசர் விளக்கு ஏற்றினார்
எபனேசர்! நீங்கள் இவர்களைப் பார்த்து கொள்ளுங்கள். நான் அவனை தேடிப் போகி-றேன்.

பில்லி கொள்ளையர்களை அடித்து வீழ்த்திக்கொண்டிருக்கும் செய்தி காட்டுத் தீபோல ஊருக்குள் பரவியது. அவ்வளவு நேரம் பயந்துகொண்டு வீட்டுக்குள் இருந்தவர்கள் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கொள்ளையர்களை அழிக்கப் புறப்பட்டார்கள்.
சபாஷ் பில்லி!
அதோ பில்லி!
நாங்களும் உங்களுடன் வருகிறோம்.

பில்லியிடம் இருந்து தப்பித்த காரல் பள்ளிக்குள் ஆவேசமாக நுழைந்தான். அதேநேரம், ரோசி காணாமல்போன சிறுவனைக் கண்டுபிடித்து, வெளியே வந்தாள்.
ஏய்... நில்!
கில்! சீக்கிரம் வெளியே வா!
கொள்ளையனைக் கண்டதும், ரோசியும் சிறுவனும் வெலவெலத்துப் போனார்கள்!

காரல், திடீரென்று
ரோசியையும்,
சிறுவனையும்
பிடித்து அவர்களை
துப்பாக்கிமுனையில்
கொண்டுவந்தான்
நில்லுங்கள்! இந்த பீப்பாயில்
வெடிகுண்டுகள் இருக்கின்றன.
யாராவது கிட்டே நெருங்கினால்
பீப்பாயை சுட்டுவிடுவேன்.
எல்லாரும் துண்டு துண்டாகி
விடுவீர்கள்,
ஜாக்கி
ரதை!
அனைவரும் திகைத்து நின்றார்கள்!

பில்லி மெதுவாகக் காரலை நெருங்கினார்.
பில்லி...
வேண்டாம்!
பில்லி!
விளையாட்டு
வினை -
யாகிவிடும்.
வேண்டாம்,
சொன்னால்
கேளுங்கள்.
காரல்!
மரியாதையாக
துப்பாக்கியை
என்னிடம் கொடு!

ில்லி நெருங்கியதும் காரல் அவரைத் தாக்கினான். அதில்
ிருந்து லாவகமாகத் தப்பித்த பில்லி, அவனுக்கு
சமாக ஒரு குத்து விட்டார்!
ஏய்! என்னை யார் என்று நினைத்தாய்!
நான் யார் என்று முதலில் தெரிந்துகொள்!

ாரலை ஊர் மக்கள் பிடித்துக்
கொண்டார்கள். அப்போது
ஓரன்காரர் வழிகாட்ட மாரிசை
ாவலர்கள் வண்டியில் கொண்டு
ந்து கொண்டிருந்தார்கள்.
நீங்கள் இல்லாவிட்டால் எங்கள் கதி என்ன ஆகியிருக்கும்?
யாருக்கு ஆபத்து என்றாலும், உடனே அங்கே நான் தோன்றுவேனே!

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு இருந்த செரீப்பை விடுதலை செய்த பில்லி, கொள்ளை யர்களை செரீப்பிடம் ஒப்படைத்தார்.
எங்கள் ஊரைக் கொள்ளையர்களிடம் இருந்து மீட்டுக் கொடுத்ததற்கு மிகவும் நன்றி பில்லி!
மார்சல்! பில்லியை இங்கே விருந்தினராக இருந்துவிட்டு போகச் சொல்லுங்கள்!

ஊர் மக்களிடம் விடைபெற்றுக் கொண்டு தன் செல்லக்குட்டி யான கறுப்புக் குதிரையில் ஏறி பில்லி புறப்பட்டார். ஊர் மக்கள் அனைவரும் அவரை அன்புடனும், மகிழ்ச்சியுடனும் வழி அனுப்பிவைத்தார்கள்.
என் வேலை முடிந்தது! வருகி-றேன்!!
(முடிந்தது)

லேடி ஜேம்ஸ்பாண்ட்
தோன்றும்
ராக்கெட்டு
ரகசியம்


அமெரிக்காவில் உள்ள ஒரு ராக்கெட்டு தளம். அங்கு உள்ள பிரமாண்டமான கட்டிடத்தில் விஞ்ஞானிகளின் கூட்டம் நடந்தது. ஒரு மணி நேரத்தில் சந்திரமண்டலத்துக்குப் போய்விடக்கூடிய அதிவேக புதிய ராக்கெட்டு ஒன்றை ஒரு விஞ்ஞானி கண்டுபிடித்து இருந்தார். அதுபற்றி விவாதிக்கவே இந்தக் கூட்டம். இந்தப் புதிய ராக்கெட்டு செய்யும் முறையை அறிந்துகொள்ள, வெளிநாட்டு ஒற்றர்கள் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு இருந்தார்கள்.
அந்த நேரத்தில்—

லேடி ஜேம்ஸ்பாண்ட் ஜோன் காரில் உல்லாசமாக ஊர்சுற்றிக்கொண்டு இருந்தாள். திடீர் என்று உலகப்போலீஸ்தலைமை நிலையத்தில் இருந்து அழைப்பு வந்தது. கேப்டன் ஆல்பர்ட் அழைத்தார்.
எதுக்குத் திடீர் அழைப்பு? ஏதோ பெரிய விவகாரமாகத்தான் இருக்கும்!
ஜோன் மணிக்கு நூறு கிலோ மீட்ட வேகத்தில் பறந்துகொண்டு இருந்தா அதைவிட வேகமாக இன்னொரு கார் வந்தது.
யாரது? என்னை இடித்துத் தள்ளிவிடுவார்கள் போலிருக்கிறதே!
ஜோனின்மோதிரத்தில்வயர்லெஸ் இருந்தது. திடீர் என்று அதில் குரல் கேட்டது.
ஜோன்! நான்தான். காரை நிறுத்து!!
கேப்டனின் குரல் போல இருக்கிறதே!
காரை நிறுத்தினாள்.
கேப்டன் ஆல்பர்ட் காரில் இரு இறங்கி, ஜோனிடம் வந்தார்.
நீ வரும்வரை காத்திருக்க எனக்குப் பொறுமையில்லை. அவசரமான வேலை! அதான் உன்னைத் தேடி வந்து விட்டேன்.

ராக்கெட்டு தளத்தில் விஞ்ஞானிகளின் கூட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. அங்கே போய் இந்தப் பையைக் கொடுக்க வேண்டும்.

பைக்குள் என்ன இருக்கிறது?
ராக்கெட்டு இரகசியம்!
ஆனால், உண்மையான இரகசியம் அல்ல. அத்தனையும் போலித் தகவல்கள். ஒற்றர்களை திசை திருப்பவே இந்த ஏற்பாடு.


பையை எடுத்துக்கொண்டு ஜோன் கிளம்பினாள்.
இந்தப் பையைக் கைப்பற்ற ஒற்றர்கள் என்னை விரட்டுவார்கள்! அதற்குள் விஞ்ஞானிகளின் கூட்டம் முடிந்துவிடும்! நல்ல தந்திரம்!

கூட்டம் நடக்கும் மாளிகைக்கு லேடி ஜேம்ஸ்பாண்ட் வந்தாள். அங்கே பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.
விஞ்ஞானிகளின் கூட்டம் எந்த அறையில் நடக்கிறது? ராக்கெட்டு பற்றிய இந்த இரகசிய கோப்பை அவர்களிடம் கொடுக்க வேண்டும்.
அதோ அந்த போலீஸ்காரருடன் போங்கள்!

ஒற்றர்கள் என்னை
ரத்திக்கொண்டு
நவார்கள் என்று
கேப்டன்
சொன்னார்.
யாரையும்
ாணோமே?
ஊர் என்று...
அந்தப்
பையைக்
கொடு!
ஜான் அதிர்ச்சி அடைந்தாலும், சுதாரித்துக்கொண் டான்!

நான் யார் தெரியுமா? லேடி ஜேம்ஸ்பாண்ட்!
ஆ!
ஒற்றர் கூட்டத்தைச் சேர்ந்த போலியான போலீஸ்காரன் தானே, நீ?
லேடி ஜேம்ஸ்பாண்ட் அவனை கட்டிப் போட்டாள்.
நீ இங்கேயே கிட! நான் கேப்டனுக்குப் போன் பண்ணிவிட்டு வருகிறேன்!
திடீர் என்று ஒருவன் வந்தான்!
அசையாதே! அவனை அவிழ்த்துவிடு!!

லேடி ஜேம்ஸ்பாண்ட் அவனை அவிழ்த்துவிட, அவன் எழுந்து அவளைப் பிடித்துக்கொண்டான்!
நாங்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல! எங்களுக்கு வேண்டியதை எப்படியும் பெற்றே தீருவோம்! இந்த அறைககுள்ளேயே கிட.

உன்னைப் பூட்டிவிட்டுப் போகிறோம்.
நன்றாகக் கூச்சல் போடு. வெளியே கேட்கவே கேட்காது!
சே! தப்பி விட்டார்களே!!
லேடி ஜேம்ஸ்பாண்ட் தனது லிப்ஸ்டிக்கை எடுத்தாள். உண்மையில் அது ஒரு வெடி!

லிப்ஸ்டிக்கைத் தூக்கி எறிந்தாள்.
டமார்
கதவு உடைத்துக்கொண்டது.
லேடி ஜேம்ஸ்பாண்ட் வெளியே ஓடிவந்து பார்த்தாள்.
விடக்கூடாது! அவர்களைப் பின்தொடர்ந்தால், ஒற்றர் கூட்டத்தையே பிடித்துவிடலாம்!
லேடி ஜேம்ஸ்பாண்ட் தனது காருக்கு ஓடிவந்தாள்.
அந்தப் பைக்குள் காந்தமாணி இருப்பது அவர்களுக்குத் தெரியாதே.
பீப்... பீப்...


ஊருக்கு வெளியே சிலைகள் செய்யும் ஒரு சிற்பியின் தொழில் கூடம். அதற்குள் வந்து ஒற்றர்களின் கார் நின்றது.
கதவை மூடு! நம்மை யாரும் கண்டு பிடிக்க முடியாது

ராக்கெட்டு இரகசியம் சிக்கிவிட்டது. ஆனால், லேடி ஜேம்ஸ்பாண்ட எங்களைத் துரத்திக்கொண்டு வருகிறாள்.
கவலையை விடு! அவளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

பையைத் திறந்து பார்த்தவர்கள் திடுக்கிட்டார்கள்.
உள்ளே காந்தமாணி இருக்கிறதே!
நாம் இருக்கும் இடத்தை அது காட்டிக் கொடுத்துவிடுமே!
தொழில் கூடம் அருகில் லேடி ஜேம்ஸ்பாண்ட் வந்துவிட்டாள்!
சத்தம் பலமாகக் கேட்கிறது. இதன் உள்ளே தான் அவர்கள் இருக்கக் கூடும்!
பீப்... பீப்... பீப்...
காரில் இருந்து இறங்கி, உள்ளே எட்டிப் பார்த்தாள்.
சன்னல் கதவு திறந்து இருக்கிறது. அதன் வழியே உள்ளேபோவது நல்லது!

சன்னல் வழியேலேடி ஜேம்ஸ்பாண்ட் உள்ளே வந்தாள்.
யாரையும் காணோமே!
சுதந்திரச் சிலையை நெருங்கினாள். ட் என்று அந்தச் சிலை அவளைப் டித்துக்கொண்டது!
ஆ!

லேடி ஜேம்ஸ்பாண்ட் தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சித்தாள். முடியவில்லை!
இது சாதாரண சிலையல்ல. ஏதோ விசை பொருத்தி -யிருக்கிறார்கள்!

ஒற்றர்கள் எக்காளத்துடன் வந்தார்கள்!
வரவேண்டும் லேடி ஜேம்ஸ்பாண்ட்! உனக்காகத்தான் சன்னலைத் திறந்து வைத்தேன்! இந்த சிலையையும் இங்கே நிறுத்தினேன்!

நாங்கள் இந்த இடத்தைக் காலிபண்ணிக்கொண்டு, வெளிநாட்டுக்கு ஓடப் போகிறோம். நீ இந்த சிலையின் பிடியில் இருந்தே வாடி வதங்கி சாகவேண்டியதுதான்!
இந்த சிலைக்குப் பெயர் சுதந்திரச் சிலை. உனக்கு சுதந்திரமே கிடைக்காது. சிலையின் உள்ளே ஓர் எந்திரம் இருக்கிறது.
உடனே கெலிகாப்டர் அனுப்பச் சொல்லி நான் தகவல் அனுப்புகிறேன். நீங்கள் புறப்படத் தயாராகுங்கள்.

சன்னல் ஓரமாக இருந்த ஒரு சுத்தியல் லேடி ஜேம்ஸ்பாண்டின் பார்வையில் பட்டது!
இதுதான் ஒரே வழி! வேறு வழியில்லை!
சுத்தியலை எடுக்க மிகவும் சிரமப்பட்டான்!
எடுத்ததும் சிலையின் கையில் அடித்து உடைத்தாள்!
ஏய்! இவள் தப்பி விட்டாள்!!


ஒற்றர்கள் பிடிக்க முயற்சித்தார்கள். லேடி ஜேம்ஸ்பாண்ட் ஓடினாள்
பிடி அவனை!
எங்கே ஓட முடியும்? கதவு பூட்டி-யிருக்கிறதே!


லேடி ஜேம்ஸ்பாண்ட் வேகமாகக் காலை உதறினாள், செருப்பு தனியே கழன்று ஓடியது!
எனக்காகத் தைத்த செருப்பு என்றார்களே? எப்படி வேலை செய்கிறது என்று பார்ப்போம்!

அவரில் மோதியதும், செருப்புக்குள் இருந்த வெடி பயங்கரமாக வெடித்து சிதறியது!
டமார்
ஒற்றர்கள் படுகாயம் அடைந்து, விழுந்தார்கள்!
இவர்களை அள்ளிப் போட்டுக்கொண்டு போக லாரி அனுப்ப கேப்டனுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்.
லேடிஜேம்ஸ்பாண்ட்டின் லிப்ஸ்டிக்கில் இரகசிய வயர்லெஸ் இருந்தது.

கேப்டன்! நான் லேடி ஜேம்ஸ்பாண்ட் பேசுகிறேன்! ஊருக்கு வெளியில் இருக்கும் சிற்பக் கூடத்துக்கு உடனே ஒரு லாரியை அனுப்புங்கள்...
எதுக்கா... நீங்களே நேரில் வந்து பாருங்கள்!
இதோ வருகிறேன்.
கேப்டன் ஆல்பர்ட் விரைந்து வந்து சேர்ந்தார்.
பலே ஜோன்! ஒற்றர்—களுக்கு நன்றாகத் தண்ணி காட்டிவிட்டாய்!
விஞ்ஞானிகளின் கூட்டம் பாதுகாப்பாக நடந்து முடிந்துவிட்டது...
அந்த தலை எதுக்கு?
அடுத்த முறை எங்காவது போகும் பொழுது இந்தத் தலைக்குள் ஒரு வெடி குண்டை வைத்து எடுத்துப் போகலாம் அல்லவா!
(முடிந்தது)

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த காமிக்ஸ்

குலை நடுங்க வைக்கும் கொலைகள்!

இரத்தப்பலி

முழு நீள படக் கதை

பிப்ரவரி 16-ந்தேதி வெளிவருகிறது.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

‘‘ராணி காமிக்ஸ்’’